திரு வி. தங்கபாண்டியன். தலைவர் அவர்களே, அந்தக் கால்வாயை நாராயணன் கால்வாய் என்றும் சொல்வதுண்டு. அப்படி அந்த நாராயணன் கால்வாய்த் திட்டம் பற்றிய கோரிக்கை அந்தப் பகுதி மக்களிடமிருந்து அரசுக்கு வந்ததா? அது குறித்து செயல்குறிப்பு ஏதேனும் அமைத்து நடவடிக்கை எடுக்க உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : நாராயணன் கால்வாய் திட்டத்திற்கு ரூ. 10·25 லட்சம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தில் 5 பகுதியில், 3 பகுதிகள் குறித்த வேலையில் ரூ. 5·41 லட்சம் செலவாகி முடிந்திருக்கிறது. எஞ்சிய பகுதியில் உள்ள நிலச் சொந்தக்காரார்கள் மறுப்பு தெரிவித்திருப்பதால் அது முடிவான பிறகு, மீண்டும் வேலை தொடங்கும்.

Sub-Inspector, Dindigul.

* 228 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether any resolution was passed at the Dindigul Municipal Council meeting held in February 1968 and sent to the Tamil Nadu Government to reprimand and take action against the Taluk Sub-Inspector for having spoken in a derogatory manner of the Councillor Thiru Rajayya; and

(*b*) if so, the action taken thereon ?

திண்டுக்கல் சப்-இன்ஸ்பெக்டர்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திண்டுக்கல் நகரசபைக் கூட்டத்தில் 1968 பிப்ரவரி மாதம் நகரசபை உறுப்பினர் திரு ராஜய்யாவை தாலூக்கா சப்-இன்ஸ்பெக்டர் தரக் குறைவாகப் பேசியதைக் கண்டித்து, அவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி தீர்மானம் நிறைவேற்றி தமிழக அரசுக்கு அனுப்பப்பட்டதா ?

(இ) ஆமெனில், அதன் மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி . (அ) and (இ) மேலவை முன் விவர அறிக்கை* ஒன்று வைக்கப்பெற்றுள்ளது.

Community Development Reorganisation

* 229 *Q.*—THIRU V. ISVARMURTHI : Will the Hon. the Minister for Local Administration be pleased to state the action taken on Thiru Murugesa Mudaliar's Report on the Community Development Reorganisation ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

THIRU V. ISVARMURTI : When Thiru Murugesa Mudaliar's Report was released, there was a report to the effect that the Government would retrench the panchayat union staff and make a reorientation of financing the farmers through Land Mortgage Banks and use the revenue staff. The Panchayat Union staff have, in fact, become surplus. May I know whether the Government

* Printed as Appendix on page 62.

propose to make any retrenchment or, how do they propose to utilise the surplus staff? Last year's Chief Ministers' Conference discussed the reorganisation of the Community Development department. What do the Government propose to do in the light of the decision of the conference?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : இவைகள் அனைத்தும் இந்த பரிசீலனைக்குப் பின்னால் முடிவாகத் தெரியும்.

Electricity Board Supervisors.

* 230 *Q* —THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Electricity Board Supervisors' Delegation met the Hon. the Minister for Industries in August 1968 and submitted a petition to him;

(*b*) if so, the action taken thereon;

(*c*) the number of Supervisors retrenched so far; and

(*d*) the number of Supervisors to whom notice for retrenchment had been given?

மின்சார வாரிய மேற்பார்வையாளர்கள்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழக மின்சார வாரிய சூபர்வைசர் குழு ஒன்று 1968 ஆகஸ்டில் கல்வி-தொழில் அமைச்சரைக் சந்தித்து ஒரு மகஜர் கொடுத்ததா ?

(இ) ஆமெனில், அதன் மேல் எடுத்த நடவடிக்கை யாவை ?

(உ) இதுவரை எத்தனை சூபர்வைசர்கள் வேலை நீக்கம் செய்யப் பட்டார்கள் ?

(எ) இன்னும் எத்தனை பேருக்கு வேலைநீக்க நோட்டீஸ் கொடுக்கப் பட்டது ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : (அ) ஆம்.

(இ) அம் மனு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அனுப்பப் பட்டது.

(உ) மின்சார வாரியத்தின் தகவல்படி 33 பேர்களை வேலை நீக்கம் செய்வதென்று கருதப்பட்டது. ஆனால் 26 பேர்கள் தான் வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள். ஈட்டிய விடுப்பில் சென்றிருக்கும் மேற்பார்வை யாளர்களின் காலி இடங்களில் மீதி 7 பேர்கள் தொடர்ந்து வேலையில் இருக்கிறார்கள்.

(எ) தொடர்ந்து சிவில் மேற்பார்வையாளரின் வேலை நீக்கத்தை நிறுத்தி வைக்க ஆணையிடப்பட்டுள்ளது.

MR. CHAIRMAN : Questions are over.

[NOTE.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]